# சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
# ”அம்மா!” என்று அழைக்காத உயிர் இல்லையே!

ஐந்நூறு வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவம் இது.
**ஸ்ரீரங்கம்** க்ஷேத்ரம்!

அவ்வூரில் பல இடங்களில் வேதங்கள் கற்றுக் கொடுக்கும் வேதபாடசாலைகள் இருந்தன. அதன் ஒன்றில் தான் படிக்கிறான் **ரகுநாதன்**. பாவம் அப்பா இல்லாத ஒரே பையன், அம்மா தான் அவனுக்கு உலகம். அவளோ மிகச் சிறிய வயதில் இருந்தே ”***ஸ்ரீரங்கநாதனே உனக்குத் தாய்-தந்தை***” என்ற ஆழ்ந்த பக்தியையும் அறிவையும் சாதத்துடன் ஊட்டி வளர்த்தும் வருகிறாள். இவர்கள் வாழ்வதோ ஸ்ரீரங்கத்துக்குப் பக்கத்தில் உள்ள இன்றைய **ஜீயர்புரத்தில்** தான்!

வேதபாட சாலையில் சேர்ந்த காலத்தில் அவன் மனம் அம்மாவை விட்டுத் தவித்தது உண்டு, ஆனால் போகப்போகப் பழகிக் கொண்டான். சதா வேதம் கற்பது, ரங்கனின் உத்சவங்களில் ஈடுபடுதல் என அவன் மனம் திசை மாறியது.

ஆனால் தன் சக நண்பர்களுடன் படிப்பு நேரம் போக மீதி சமயத்தில் எப்போதும் கோயிலுக்குள்ளேயே விளையாடுவான், கதை பேசுவான், அதுவும் தன் அம்மா புகழையே தான் பேசுவான் ரகுநாதன். அவன் தோழர்கள் கூட தங்கள் தாயாரை, அவனைப் பார்த்து மேலும் அன்புடன் மதிக்கக் கற்றுக் கொண்டார்கள் என்றால் பாருங்கள்!

குறிப்பாக பெருமாள் மூலஸ்தானத்துக்குப் பின்புறம் உள்ள உயர்ந்த மேடையில் [யாக சாலை] அமர்ந்தே ரகுவின் அம்மா புகழ் அரங்கத்தம்மா பின் நடப்பது வழக்கம்.

மாதம் நான்கு தினங்கள் பள்ளி விடுமுறை வரும். மாணவர்கள் வீட்டுக்குச் சென்றுவிடுவர்.வழக்கம் போல் ஒரு விடுப்பு தினம், ரகுவும் அம்மாவைக் காணும் ஆசையில் ஊர் நோக்கி வயல்களில் இடையே சில பஜனைப் பாடல்களைப் பாடியபடியே நடந்தான். வழியில் ஒரு வயல் வரப்பின் ஓரம் கீரைகள் பிடுங்கிப் போடப்பட்டு இருக்கின்றன.

ரகுவுக்கோ அவற்றைப் பார்த்தவுடன் அம்மா கீரை வகைகளைச் சமைத்து ஊட்டும் சுவை ஞாபகம் வர வாயில் தேன் ஊறியது. கீரைகளையே பார்த்துக் கொண்டு நிற்கிறான், கையில் இப்போது போல அப்போது எல்லாம் ஏது pocket money?

வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயி அவனைப் பார்த்து அருகில் வந்து அவன் எண்ணத்தைப் புரிந்து கொண்டு, ”தம்பீ! ஸ்ரீரங்கத்துப் பையனா? ஊருக்குப் போறியா? இந்தா எத்தனை கீரை வேணுமானாலும் எடுத்துட்டுப்போ!” என்று அன்புடன் அனுமதித்தான். ரகுவுக்குக் கேட்கவா வேண்டும்?

***”ஐயா! வெறுமனே எதையும் ஒருத்தரிடம் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடாது என்று என் ஆச்சாரியன் கூறுவார். என்னால் முடிந்தது, உங்கள் வயலில் விவசாயம் நன்றாக நடக்க ஸ்ரீவேதாந்த தேசிகரின் பூ ஸ்துதி [பூமி தேவி மீதான ஸ்தோத்ரம்] சொல்லிக் கொள்கிறேன்”*** என்று மிக அற்புதமாக ஸ்தோத்ரம் சொல்லி விட்டுக் கீரைக் கட்டுக்களுடன் வீட்டை அடைந்தான் ரகு.

**தன் கீரைகளை ரகுவுக்குள் இருக்கும் மெய்யுணர்வான ஸ்ரீரங்கநாதருக்கே விவசாயியும் மனதார அர்ப்பணித்தான் .**

அம்மாவும் மகனும் கொஞ்சிக் கொண்டு விளையாடினர், வேதம் சொல்லக் கேட்டு மகிழ்கிறாள் தாய். கீரைகளைப் பார்த்தவுடன் அவை கிடைத்த விதத்தை அறிந்து தன் மகனின் மனப்பக்குவத்தை உணர்ந்து பூரிக்கிறாள்.

”அம்மா! சற்று நேரத்தில் தலை முடியைத் திருத்திக் கொண்டு வருகிறேன் [saloon], கீரைக் கூட்டு, பொறியல், கடைசல் எனச் சமைத்து வையுங்கள், சேர்ந்தே உண்போம்!” என்று வெளியே போனான் ரகு.

முடி திருத்திக் கொண்டு உள்ளூர்ச் சிறுவர்களுடன் தன் மகன் காவிரியில் போடும் ஆட்டத்தை அறியாதவளா அவள்? சமைக்க முற்பட்டாள்.

காலம் போனது, மகனைக் காணவில்லை. அம்மாவுக்கோ கவலை!
”ரகு பசி தாங்க மாட்டானே?” என்று சதா சொல்லிக் கொண்டே, தெருவைப் பார்ப்பதும் உள்ளே போவதுமாய் இருக்கிறாள். இன்னும் காலம் கழிய, வேகமாய் வீடு வந்தான் ரகு.

”அப்பா! எங்கே போனாய்? உனக்குப் பசிப்பது எனக்கு வயிறு வலிக்கிறது! வா உன் இஷ்டப்படி சமைத்த கீரைகளைச் சாப்பிடு!” என்று இலையில் பரிமாறுகிறாள் தாய்.

ஒவ்வொரு கீரையையும் சுவைத்து உண்ட மகன் ஒரு கரண்டி அளவே வைத்து விட்டு அத்தனை உணவையும் உண்டான்.அத்தனை பசி! உடனே படுத்துக் கொண்டான் அம்மா மடியில். அம்மாவும் பசியாற்றிய அமைதியில் மீதிக் கீரையை

சாதத்துடன் பிசைந்து உண்டு கை கழுவ எழுந்த போது, யாரோ கதவைத் தட்டினார்கள்.,திறந்தால், ரகு.

"அம்மா! ஐயோ பசி பொறுக்கவில்லையே! அந்த கீழ் வீட்டு மாமா என்னைப் பிடித்து வைத்துக் கொண்டு வேதத்தில் பல சந்தேஹங்கள் கேட்டு விடக் காலம் ஆகிவிட்டது! சாதம் போடு அம்மா!" என்றானே பார்க்கலாம், அவன் தான் மனம் கலங்கி உள்ளே பார்த்தாள் தன்னிடம் சற்றும் நேரத்துக்கு முன் உட்கார்ந்து உண்ட ரகுவைக் காணவில்லை.

என்ன நடக்கிறது என்று அவளுக்குப் புரியவில்லை, ரகுவோ பசியால் துடிக்கிறான். "ரகு சற்று பொறு!" என்று கூறிவிட்டுப் பூஜை அறையில் சென்று சற்று மனதை ஒருநிலை செய்து ப்ரார்த்தித்த போது, அவள் மெய்யுணர்வில் வந்தான் ஸ்ரீரங்கநாதன்.

***"ஹே! அம்மா! உன்னிடம் வந்து கீரை அமுது உண்டது அடியேன் தான். சதா படை எடுப்புகளால் பாதிக்கப்பட்டு சரிவர பூஜைகள் தடைப்பட்டு நான் கிடக்கும் வேளையில் தினமும் உன் அன்பின் பெருமையை உன் மகன் தன் தோழர்களுடன் பேசக் கேட்கிறேன், எனக்கும் என் தாயார்களான அதிதி [வாமன மூர்த்தியின் அம்மா], கௌசல்யா தேவி, தேவகி, யசோதை ஆகியோரின் ஞாபகம் வர ஏக்கம் வந்து விட்டது.***

***அம்மாவின் அன்பைப் பாராட்டுவது குழந்தைகளின் இயற்கை. ஆனால் அந்தத் தூய அன்பின் மயமாய் மெய்யுணர்வாகிய தெய்வமே இருக்கும் சத்ய ரகசியத்தை ஆழமாக உணர்ந்தவன் உன் மகன். அதனால் தான் மனம் உருகி உன் மகன் வடிவு ஏற்றுக் கொண்டு உன் கீரை அமுதை உன் அன்புடன் உண்டேன்.***

***மேலும் பட்டம்-பணம்-பதவிக்குப் பிள்ளைகளைப் படிக்க வைத்துப் பெருமை தேடும் இக்கலி யுகத்தில் [time of ignorance] அவன் மிகச் சிறந்த மனிதனாக முதலில் வாழ வேண்டும் என்று சங்கல்பித்த உன்னைக் காணும் ஆசையால் உன்னைத் தேடி வந்தேன்! யசோதை ஊட்டிய பால்ச்சோற்று அமுது போல உன் கீரை அமுதை மிக இஷ்டப்பட்டு உண்டேன்!"***

என்று கூறிட, அன்னை நெகிழ்ந்தாள்.தன் மகனின் அன்பையும் ஸ்தரத்தையுடன் அவன் கற்றிடும் வேதத்தையும் போற்றினாள். அன்று முதல் தினமும் அவள் கீரை சமைத்துத் தானே ஸ்ரீரங்கம் எடுத்துச் சென்று சன்னிதியில் ஒரு புறம் நின்று,

"**ஹே! ஸ்ரீரங்க ரகு! வா அப்பா! கீரை அமுது சாப்பிடு!**" என்று பக்தியுடன் நிவேதித்தாள். அவ்வாறு நிவேதித்த கீரை அமுதை ஒரு ஏழைக் குழந்தைக்கும் தருவதை வழக்கம் ஆக்கினாள்.

***"மானசீகமாக இறைவனுக்கு நீவேதிக்கும் போது உலகில் உள்ள ஜீவன்களின் பசி போகிறது'*** என்று உணர்ந்து கூறுவாள் ரகுவின் தாய்.

இதைக் கொண்டு அவர் தன் பாவனா [transforming ourself as the character we wish to perform] பக்தியால் ஸ்ரீரங்கனிடம் யசோதை போலவே பக்தி செலுத்தினார்.

பிற்காலத்தில் இந்தத் தாயின் பக்தியை உணர்ந்த ஸ்ரீரங்க ராமானுஜ மடத்து ஜீயர் [Chief authority of the temple] ஸ்வாமிகள் வருஷத்துக்கு ஒரு முறை ஜீயர்புரம் எழுந்தருளிக் கீரை அமுது உண்டு, ரகுநாதனின் வம்சத்தில் வாழ்பவர்களுக்கு அருளும் உத்சவத்தை ஏற்பாடு செய்தார். இந்த உத்சவம் நிகழ்வதன் மூலம் தாயின் அன்பின் பவித்ரத்தை இறைவனே உணர்த்தி விடுகிறார் அல்லவா?

* பங்குனி மாதம் ப்ரஹ்மோத்சவத்தின் இரண்டாம் நாள் இரவு பெருமாள் ஸ்ரீரங்கத்தில் இருந்து புறப்பட்டு மறுநாள் ஜீயர்புரம் சேர்ந்து, சரியாக நன்பகல் 1 மணிக்கு அவ்வூரில் இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்து கீரை அமுது செய்தருள்கிறார்.

ஓம் நமோ நாராயணாய!